Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 20, 2022

புதன்கிழமை ஜூலை 20,2022 | ஒளி: 08 கதிர் 053 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE







# இடைக்கால ஜனாதிபதிக்கு ரகசிய வாக்கெடுப்பு

**மும்முனை போட்டி**

**வாபஸ் பெற்றார் சஜித்**

**மொட்டுக்குள் சலசலப்பு**

**சிறுபான்மை கட்சிகள் அதிரடி**




**இன்று (20) காலை 10 மணிமுதல் வாக்களிப்பு இடம்பெறும்**

**பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் முன்னெடுப்பு**

பா.நிரோஸ்

விரட்டியடிக்கப்பட்டு இராஜினாமா செய்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உரிய எஞ்சிய காலத்துக்காக, இடைக்கால ஜனாதிபதியொருவரை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்களிப்பு பாராளுமன்றத்தில் இன்று (20) காலை 10 மணிமுதல் நடைபெறவிருக்கின்றது.

பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க தெரிவத்தாட்சி அதிகாரியாக செயற்பட, இந்த வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது. இடைக்கால ஜனாதிபதியொருவரை தேர்ந்தெடுப்பதற்காக, பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் வாக்களிப்பது இதுவே முதன் முறையாகும். தொடர்ச்சி P2

## 25 வரை விடுமுறை

நாளை (21) முதல் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த விடுமுறை ஜூலை 25 வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சு நேற்று (19) அறிவித்தது.



## குறுகிய காலத்துக்குள் வெற்றி பெறுவோம்

**சஜித் –டலஸ் கூட்டாக அறிவிப்பு**

நாட்டை பலப்படுத்துவதுடன், பாதுகாப்பை உறுதிப்படுத்தி தற்போதைய நெருக்கடியில் இருந்து மக்களை மீட்டெடுப்பதே எமது பொது நோக்கமாகும், இதில் சகல மக்களையும் இணைத்துக்கொண்டு ,எமது மிகச்சிறந்த அணியுடன், எம்மிடம் உள்ள சிறந்த வேலைத்திட்டங்களை ஓர் இலக்கை நோக்கி, குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவோம் என இடைக்கால ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெரும மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் கூட்டாக அறிவித்தனர். தொடர்ச்சி P2

## இலங்கைக்கே எமது முன்னுரிமை



இலங்கையின் இன்றைய மாற்றங்கள் வெறுமனே தற்காலிக மாற்றமாக மட்டுமே பயன்படுத்திக்கொள்ளாது நீண்டகால ஸ்திரத்தன்மையை கொண்டதாக அமைய வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகின்றது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார். விரைவான மற்றும் பயனுள்ள தொடர்ச்சி P2

## மின்சார கட்டணம் 69% ஆல் அதிகரிக்கும்



ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் இருந்து மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என்று தெரிவித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, தற்போதைய மின்சாரக் கட்டணம் 69 சதவீதத்தால் தொடர்ச்சி P2



## டிக்கெட் தட்டுப்பாடு: திணறுகிறது ரயில்வே

ரயில் நிலையங்களில் அச்சிடப்பட்ட பயணச் சீட்டுகளின் கையிருப்பு குறைந்து வருவதால், இலத்திரனியல் பயணச் சீட்டுகளை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு இலங்கை தொடர்ச்சி P2

## ரணிலுக்கு எதிரான மனு தள்ளுபடி



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்ற உறுப்பினராக நியமித்ததன் சட்டபூர்வதன்மையை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை உயர்நீதிமன்றம், நேற்று (19) தள்ளுபடி செய்தது. தொடர்ச்சி P2

எரிபொருள் விநியோகத்தில்

## பொதுப் போக்குவரத்துக்கு பஸ்களுக்கு முன்னுரிமை




பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை வழங்கி எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று (19) இடம்பெற்ற தொடர்ச்சி P2

## தலையை மீண்டும் தூக்குகிறது கொரோனா

நாட்டில் கொவிட் -19 வைரஸ் பரவலானது கடந்த சில மாதங்களாக கட்டுப்பாட்டில் இருந்ததாக சுகாதார தரப்பினர் உறுதிப்படுத்திய போதிலும், தொடர்ச்சி P2

யார் ஆட்சியமைத்தாலும்

## சீனாவுடனான நட்புறவு அவசியம்



புதிய அரசாங்கம் ஒன்று உருவாகப்போகின்றது, எந்த அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தாலும் சீனாவுடன் சிறந்த உறவைப் பேணிக்கொள்ளும் என்று தான் நம்புவதாக சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கோஹன தெரிவித்துள்ளார். தேர்தலின் பின்னர் அரசாங்கத்தை யார் கைப்பற்றினாலும் சீன அரசாங்கத்தின் நம்பிக்கையையும் சீன மக்களின் நன் மதிப்பையும் தொடர்ச்சி P2

## பஸ் கட்டணம் குறைகிறது

40 ரூபாயாக இருந்த ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 38 ரூபாயாகக் குறைக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டோ, நேற்று (19) தெரிவித்தார்.

நேற்று (19) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அனைத்து பஸ் கட்டணங்களும் 2.23 சதவீதத்தால் குறைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2





## சுயாதீன அணியும் டலஸின் பக்கம்

**நாட்டை நெருக்கடிக்குள் தள்ள ரணில் முயற்சிக்கின்றார்**

இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்காக ஆளுந்தரப்பு உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் பெயர் எதிர்க்கட்சி தலைவரினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில் டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்க சுயாதீன குழுவினர் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர் என அவ்வணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார். மக்கள் விடுதலை முன்னணியையும் தம்முடன் இணைத்துக்கொண்டு பயணிக்க வருமாறும் அவர் அழைப்பு விடுத்தார். தொடர்ச்சி P2



## கீரியிடமிருந்து பிடுங்கி நரியிடம் ஒப்படைப்பதா

பா.நிரோஸ்

கீரியிடமிருந்து கோழியைப் பிடித்து நரியிடம் ஒப்படைக்க முடியாது என தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், இதனாலேயே ஜனாதிபதி வாக்கெடுப்பின் தொடர்ச்சி P2

## விவசாயிகளுக்கு யூரியா விநியோகம் ஆரம்பம்

**3 நாட்களில் 3,000 தொன் விநியோகம்**



நாடளாவிய ரீதியில் உள்ள கமநல சேவை நிலையங்களுக்கு மூன்று நாட்களுக்குள் 3,000 மெற்றிக் தொன் யூரியா உரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள விவசாய திணைக்களம், எஞ்சிய பகுதிகளுக்கு விநியோகம் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவித்துள்ளது.

இந்திய கடன் வரியின் கீழ் பெறப்பட்ட 65,000 மெற்றிக் யூரியா உரத்தின் முதல் தொகுதியான 44,000 மெற்றிக் தொன் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு, அரசுக்கு சொந்தமான சிலோன் உர நிறுவனம் மற்றும் கொழும்பு வர்த்தக உர நிறுவனம் ஆகியவற்றுக்கு சொந்தமான கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டன. தொடர்ச்சி P2


ஈஸ்டர் ஞாயிறு விவகாரம்

## ரணிலின் அறிக்கையை ஏற்கமுடியாது

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிக்கைகளை நம்பவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாது என கொழும்பு தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இடைக்கால ஜனாதிபதிக்கு ரகசிய வாக்கெடுப்பு




## மும்முனை போட்டி
## வாபஸ் பெற்றார் சஜித்
## மொட்டுக்குள் சலசலப்பு
## சிறுபான்மை கட்சிகள் அதிரடி

அரசியல் ஸ்திரதன்மை அதனோடு இணைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை அடுத்து ஏற்பட்ட மக்கள் கொந்தளிப்பால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டைவிட்டோடி தனது ஜனாதிபதி பதவியையும் இராஜினாமா செய்துக்கொண்டார். அதன்பின்னர். பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங் பதவியேற்றிருந்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதியொருவர் இராஜினாமா செய்ததன்பின்னர் ஏழு நாட்களுக்குள் இடைக்கால ஜனாதிபதியொருவர் தெரிவு செய்யப்படவேண்டும். அதற்காகவே இன்றையதினம் இரகசிய வாக்களிப்பு நடத்தப்படவுள்ளது.

இதில், நான்கு பேர் களமிறங்குவர் என செய்திகள் வெளியாகியிருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, அந்தப் போட்டியிலிருந்து விலகிக்கொண்டு, மற்றுமொரு வேட்பாளரான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெருமவுக்கு ஆதரவளித்து, அவரது பெயரை வழிமொழிந்தார்.

பதில் ஜனாதிபதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான அமைச்சர் தினேஷ் குணவர்தன வழிமொழிய, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் அமைச்சருமான மனுஷ நாணயக்கார வழிமொழிந்தார்.

மூன்றாவது வேட்பாளராக களமிறங்கியிருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜே.வி.பியின் தலைவருமான அனுரகுமார திஸாநாயக்கவின் பெயரை, அக்கட்சியின் எம்.பியான விஜித ஹேரத் முன்மொழிய, அதேகட்சியின் எம்.பியான ஹரிணி அமரசூரிய வழிமொழிந்தார்.

வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்வதற்காக மட்டுமே நேற்றையதினம் (19) கூடிய சபையமர்வு, குறுகிய நேரத்துக்குள் நிறைவடைந்தது. அதன்பின்னர், இன்று (20) காலை 10 மணிக்கு சபையமர்வு ஒத்திவைக்கப்பட்டது. இடைக்கால ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், பாராளுமன்றம் ஜூலை 27 ஆம் திகதியே மீண்டும் கூடும்.

இடைக்கால ஜனாதிபதி தேர்தலின் போது பதில் ஜனாதிபதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்திருக்கும் நிலையில், மற்றுமொரு வேட்பாளராக டளஸ் அழகபெருமவை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன களமிறக்கியிருப்பது மொட்டுக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்த இடைக்கால ஜனாதிபதித் தேர்தலில் தங்களுடைய வகிபாகம் என்னவாக இருக்குமென பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை கட்சிகள் நேற்று (20) மாலை வரையிலும் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. எனினும், கொழும்பில் நேற்றிரவு கூடி ஆலோசனை செய்துள்ளனர்.

# குறுகிய காலத்துக்குள் வெற்றி பெறுவோம்

இருவரும் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று (19) விசேட அறிவிப்பொன்றை விடுத்த போதே இதனை தெரிவித்தனர். இது குறித்து டலஸ் அழகப்பெரும தெரிவிக்கையில்,

நாட்டின் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கொள்கைகளை தாண்டிய இணக்கப்பாடுகள் மிகவும் அவசியமாகின்றன. இன்று அரசாங்கமாக எமக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. பாராளுமன்ற தீவுக்குள் இருக்கும் தீவுவாசிகள் எவருக்கும் அதனை தாண்டிய மக்களின் கோரிக்கையை செவிமடுக்க மறுக்கின்றனர். ஆனால், நாம் மக்களின் நிலைப்பாட்டுக்கு செவிமடுத்து ஒன்றிணைந்துள்ளோம். எதிர்க்கட்சி தலைவர் இன்று பாரிய தியாகம் ஒன்றினை செய்துள்ளார்.

# இலங்கைக்கே எமது முன்னுரிமை

பொருளாதார மீட்சிக்கு இந்தியா எப்போதுமே உதவும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள இன்றைய நெருக்கடி நிலைமையில், நிதி உதவிகளை செய்து வருகின்றோம். அத்தியாவசிய உணவு மற்றும் மருத்துவ உதவிகளையும் செய்து வருகின்றோம். அத்துடன் வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் மூலமாக மனிதாபிமான உதவிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாம் எப்போதுமே இலங்கையின் நல்ல நண்பன் என்பதை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# டிக்கெட் தட்டுப்பாடு: திணறுகிறது ரயில்வே

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், இந்த விடயத்தில் இலங்கை ரயில்வே எவ்வித அக்கறையும் காட்டவில்லை என சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

பயிற்சி பெற்ற பணியாளர்கள் மற்றும் போதிய பணியாளர்களை அலுவலக பணிக்கு நியமிக்காததால், அரச அச்சகத் திணைக்களத்தில் பயணச் சீட்டு அச்சடிக்கும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அச்சிடும் கருவிகள் இலங்கை ரயில்வே தலைமையகத்தில் உள்ள அச்சிடும் அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பில் உடனடி கவனம் செலுத்தப்படாவிட்டால், கொழும்பு கோட்டை, மருதானை, கம்பஹா, வெயங்கொடை, ராகம ரயில் நிலையங்கள் மற்றும் பல உப நிலையங்களில் வழங்குவதற்கான பயணச் சீட்டுகள் தட்டுப்பாடு காரணமாக பிரச்சினை ஏற்படலாம் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பயன்படுத்திய பயணச்சீட்டுக்களை மீண்டும் பயன்படுத்தும் முறையை மீண்டும் ஏற்படுத்தினால், புதிய பயணச்சீட்டுக்களை அச்சடிக்கும் செலவை ஓரளவு குறைக்கலாம் என்றும் குறிப்பிடுகின்றனர்.

# ரணிலுக்கு எதிரான மனு தள்ளுபடி

நீதியரசர்களான காமினி அமரசேகர, ஷிரான் குணரத்ன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டமை உள்ளிட்ட காரணங்களை கருத்திற் கொண்டு இந்த மனுவை பரிசீலிப்பதற்கு அனுமதி மறுத்த நீதிமன்றம், மனுவை தள்ளுபடி செய்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி பதவிக்கு தகுதியற்றவர் என்று அறிவிக்குமாறு கோரி வினிவித பெரமுனவின் பொதுச் செயலாளர் நாகானந்த கொடிதுவக்கு இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

சட்டமா அதிபர் தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலப்பகுதியைக் காரணம் காட்டி பூர்வாங்க ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தார்.

உண்மைகளை தவறான முறையில் மறைத்ததற்காக மனுதாரர் தாக்கல் செய்த இதேபோன்ற மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு மனுதாரர் குற்றவாளியாக இனங்காணப்பட்டமையையும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுட்டிக்காட்டியிருந்தார்.

சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனைகளுக்கு

# மின்சார கட்டணம் 69% ஆல் அதிகரிக்கும்

அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

மின்சார சபை 130 சதவீத கட்டண உயர்வை கோரிய போதிலும், குறைந்த மின்சார பாவனையாளர்களுக்கு சலுகைகளை வழங்கி இந்த கட்டண உயர்வு அமுல்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் 82 சதவீத கட்டண அதிகரிப்புக்கு இலங்கை மின்சார சபையினால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக கடந்த ஜூன் மாதத்தில் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

மின்கட்டண அதிகரிப்பு 57 சதவீதத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றும் உத்தேச மின்கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை அறிய தீர்மானிக்கப்பட்டு உள்ளதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் அப்போது அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தலையை மீண்டும் தூக்குகிறது கொரோனா

கடந்த மூன்று வாரங்களில் நாளாந்தம் 30 தொடக்கம் 40 என்ற சராசரியான எண்ணிக்கையில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர். இந்நிலையில் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தற்போதும் இருக்கும் பிரதான தெரிவு வைரஸ் தடுப்பூசி ஏற்றிக்கொள்வது மட்டுமே என சுகாதார பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

# சீனாவுடனான நட்புறவு அவசியம்

பேணுவது அவசியம் என்றார்.

தற்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக இலங்கையில் இன்னும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன, ஜனாதிபதி இந்த பதவியை இன்னும் நீண்ட காலம் தொடர்வாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இந்த நிலைமையானது ஆரோக்கியமானதல்ல, இது மிகவும் திருப்தியற்றது, ஏனென்றால் நாட்டின் தலைமை திடீரென்று கேள்விக்குறியாகிறது. எனவே அரசியலமைப்பு விதிகள் பின்பற்றப்படும் என்றும், புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் நம்புகிறோம் என்றார்.

புதிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்போகின்றது. எந்த அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தாலும் சீனாவுடன் சிறந்த உறவைப் பேணிக்கொள்ளும் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ள கோஹன, சீனா இலங்கையின் முக்கிய வர்த்தக பங்காளி மற்றும் முதலீட்டாளர், எமக்கு இரு நாடுகளுக்கும் இடையில் மூலோபாய பங்காளித்துவம் உள்ளது, தேர்தலின் பின்னர் அரசாங்கத்தை யார் கைப்பற்றினாலும் சீன அரசாங்கத்தின் நம்பிக்கையையும் சீன மக்களின் நன்மதிப்பையும் பேணுவது அவசியம் என்றார்.

மேலும், கடன் நிவாரணம் தொடர்பாக ஐ.எம்.எப் உடன் இலங்கை எந்த ஆரம்ப உடன்பாட்டையும் எட்டவில்லை, மேலும் இலங்கையின் மிகப்பெரிய கடனாளிகளான ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவை அதன் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை விரைவுபடுத்தும் ஒரு வேலைத்திட்டத்தை கொண்டு வருமாறு வலியுறுத்தியுள்ளனர். கடனில் சிக்கித் தவிக்கும் நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது எனக்கூறி, அதிகரித்து வரும் எதிர்ப்புகள் மற்றும் அன்றாடத் தேவைகளுக்குத் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் அவசரகால நிலையை பிறப்பித்த பிறகு, நட்பு நாடுகளிடம் இருந்தே கூடுதல் உதவி கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பொதுப் போக்குவரத்துக்கு பஸ்களுக்கு முன்னுரிமை

கலந்துரையாடலின் பின்னரே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் அறிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் பல அதிகாரிகள் மற்றும் துணை நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக வழித்தட அனுமதிப்பத்திரம் உள்ள பஸ்களுக்கு எரிபொருளை வழங்க அமைச்சு தீர்மானித்துள்ளது,

தற்போது ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் பெறும் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் ஊடாக எரிபொருளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

# கீரியிடமிருந்து பிடுங்கி நரியிடம் ஒப்படைப்பதா

போது பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி ஒருஅடி பின்னுக்கு எடுத்து வைத்துள்ளது. கீரியிடமிருந்து கோழியை காப்பாற்றி நரியிடம் கொடுக்க முடியாது என்பதாலேயே நாம் ஒரு அடி பின்னுக்கு எடுத்து வைத்துள்ளோம் என்றார்.

இதேவேளை ஜனாதிபதி வாக்கெடுப்பின்போது பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் சக்தி எடுத்திருக்கும் தீர்மானம் சிறந்த தீர்மானம் எனவும், இதனால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன இரண்டாகப் பிளவுபட்டு அதிகப்படியான வாக்குகள் டலஸ்க்குக் கிடைக்கும் எனவும் வடிவேல் சுரேஷ் எம்.பி நம்பிக்கை தெரிவித்தார்.

# விவசாயிகளுக்கு யூரியா விநியோகம் ஆரம்பம்

பெரும்போகத்தின் போது வருடாந்தம் சுமார் மூன்று மில்லியன் மெற்றிக் நெல் அறுவடை கிடைத்தாலும் 2021 மற்றும் 2022 பெரும்போகத்தில், யூரியா உரம் பயன்படுத்தாமையால் நெல் விளைச்சல் 38-40 சதவீதம் குறைந்து, 1.6 மில்லியன் தொன் அறுவடையே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய சிறு போகத்தில் இருந்து யூரியா உரத்தை வழங்க தீர்மானித்ததன் காரணமாக ஏனைய பருவங்களை விட அதிகளவு நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் 21,000 மெற்றிக் தொன் யூரியாவை ஏற்றிக்கொண்டு மற்றுமொரு கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக முன்னாள் அமைச்சர் அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யூரியா உர மூடைகளின் நிறைக்கு ஏற்ப விவசாயிகளிடமிருந்து எதிர்காலத்தில் நிதியை பெற்றுக்கொள்ளுமாறு கமநல சேவை நிலையங்களுக்கு விவசாய அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

02. பொலிஸார் இருவரைத் தாக்கி

03. 50 கண்ணீர்புகை குண்டுகளை திருடியவர் சிக்கினார்

50 கண்ணீர் புகை குண்டுகளை வைத்திருந்த நபரொருவர், இராஜகிரிய ஒபேசேகரபுர பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடைய நபரே ஒபேசேகரபுர பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

# பஸ் கட்டணம் குறைகிறது

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (19) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயங்களை அவர் அறிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் எரிபொருள் விலை குறைக்கப்பட்டமைக்கு அமைய தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கணக்கீடுகளை மேற்கொண்டதாகவும் 350 வழித்தடங்களுக்குமான கட்டணம் திருத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆசன எண்ணிக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ் கட்டணத்தை 20 சதவீத்தால் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ரணிலின் அறிக்கையை...

பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார்.

பதில் ஜனாதிபதி ரணில், பாதிக்கப்பட்டவர்களின் வலியைப் பயன்படுத்தி நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்கு முயல்வதாகவும் அருட்தந்தை சிறில் காமினி குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று (19) ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அருட்தந்தை தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்க ஸ்கொட்ன்ட் யார்ட், இன்டர்போல் மற்றும் ஏனைய உலகளாவிய சட்ட அமுலாக்க நிறுவனங்களின் உதவியை இலங்கை அதிகாரிகள் நாடியிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# சுயாதீன அணியும் டலஸின்...

விசேட செய்தியாளர் சந்திப்பொன்றை நேற்று (19) நடத்தியே அவ்வணி சார்பில் இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாக தெரிவானவுடன், அரசாங்கத்தின் பலமான பொறுப்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித்தும் ஒன்றிணைவார். ஆகவே இதனை சரியாக பயன்படுத்தி நாட்டை மீட்டெடுக்க சகல தரப்பும் ஒன்றிணைய வேண்டுமென கேட்டுக்கொண்டார். ஒரு சில உறுப்பினர்கள் குழப்பத்தில் உள்ளனர், இதனை ரணில் தனக்கு சாதகமாக பயன்படுத்தி நாட்டை நெருக்கடிக்குள் தள்ள முயற்சிக்கின்றார் அதற்கு இடமளிக்க வேண்டாம்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# நம்பிக்கையை இழந்தார் அனுர

இலஞ்ச, ஊழல்வாதிகளுக்கு நான் எதிரி என்பதால், ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் தனக்கு தோல்வியே கிடைக்கும். ஆனாலும் ஜனாதிபதி வாக்கெடுப்பிலிருந்து தான் விலகப்போவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மாற்று யோசனை தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் நாம் பல்வேறு கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்த போதிலும் அதில் வெற்றிகொள்ள முடியவில்லை. நாம் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். பாராளுமன்றத்துக்குள்ளும், ஆட்சியாளர்களிடத்திலும் நாட்டு மக்கள் எதிர்பார்ப்பதையே கோரிக்கையாக முன்வைத்திருந்தோம் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்குள் எமக்கு அதிகாரங்களை வழங்குவார்களா என்பது தெரியாது. ஆனால் நாம் ஆட்சியைக் கைப்பற்றினால், சட்டமா அதிபர், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விலகியிருக்கும் வழக்குகளை மீள நாம் விசாரிப்போம். அதேபோல் இலஞ்ச, ஊழல் தொடர்பில் வழங்கப்பட்ட பல தீர்ப்புகள் தொடர்பில் நாட்டில் அதிருப்தி நிலையொன்று காணப்படுகிறது. அந்த வழக்குகளை நாம் மீள் மேன்முறையீடு செய்வோம். அதேபோல் எங்களிடமிருக்கும் பல ஆவணங்களை அடிப்படையாக வைத்து சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கைளையும் மேற்கொள்வோம்.



எனவே, இவற்றை நாம் கூறினால் எமக்கு எவரும் வாக்களிக்க மாட்டார்கள். ஜனாதிபதி வாக்கெடுப்புக்கு முன்மொழியப்பட்ட ஏனையவர்கள் இலஞ்ச, ஊழல்வாதிகளைப் பாதுகாக்கக்கூடியவர்கள். நான் இலஞ்ச , ஊழல்வாதிகளுக்கு எதிரானவன். எனவே இந்தப் பாராளுமன்றத்துக்குள் எனக்கு அதிகாரங்கள் வழங்கப்படும் என எனக்கு நம்பிக்கையில்லை என்றார்.

# ஙைக்குள் இரண்டு ஙைகள்



இடைக்கால ஜனாதிபதி பதவிக்கு மூவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதால், அரசியல் கட்சிகளுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின்பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர, ஜனாதிபதி பதவிக்கு முன்மொழியப்பட்ட மூவரும் கலந்துரையாடி போட்டியில்லாது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைத் தெரிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இன்று நடைபெற உள்ள ஜனாதிபதி தெரிவின்போது எவருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இதுவரையில் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. சுதந்திரக் கட்சிக்குள் வாக்கெடுப்பைப் புறக்கணிப்பதற்கும், வாக்களிக்க வேண்டுமெனவும் இரு நிலைப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் மனசாட்சியின்படியே வாக்களிக்க வேண்டும். நான் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கவில்லை. தீர்மானம் ஒன்றுக்கு வருவதற்கு அதிகமான காலம் செல்லாது. நால்வர் போட்டியிட ப்போவதாகமுன்பு கூறினார்கள். மூவரே போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கிறார்கள். அதேபோல் நாளை (இன்று) இடைக்கால ஜனாதிபதிக்கு முன்மொழியப்பட்டுள்ள பெயர்களில் இருந்து ஒருவர் விலகுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

போட்டியில்லாது ஜனாதிபதி, பிரதமருக்கு இருவரைத் தெரிவு செய்வதே நல்லது. இவ்வாறு தெரிவு செய்யும் பட்சத்தில் உலகுக்கும், நாட்டுக்கும் முன்னுதாரணமான அமையும். ஜனாதிபதி தெரிவுக்கு மூவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதால், அரசியல் கட்சிகள் பலவற்றில் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இது துரதிஸ்டவசமானது என்றார்.

# சஜித்தின் அர்ப்பணிப்பு ஓர் அரசியல் மாற்றமே



நாட்டு மக்கள் கோரும் அரசியல் கலாசார மாற்றத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி பதிவிக்கான போட்டியிலிருந்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ விலகியிருப்பதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டங்கள் டலஸ் - சஜித் ஆட்சியின் கீழ் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இளைஞர்கள் போராட்டங்களை மேற்கொண்டு அரசியல் கலாசார மாற்றம் ஒன்று நாட்டில் ஏற்பட வேண்டும் என போராடி வருகிறார்கள். இந்த போராட்டங்களில் நாமும் இருக்கிறோம். இதன்படியே ஜனாதிபதி பதவியில் போட்டியிடுவதிலிருந்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ விலகி அர்ப்பணிப்புக்களை செய்துள்ளார். எந்தவொரு நேரத்திலும் நாட்டுக்காக அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளக்கூடியவர் என்பதை சஜித் நிரூபித்துள்ளார் என்றார்.

ஜனாதிபதி, பிரதமர் பதவி மாத்திரமல்லாது புதிய வேலைத்திட்டம் ஒன்றையும் நாம் முன்வைக்க உள்ளோம். நாட்டு மக்கள் நாளாந்தம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களுக்காகவே பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்க தீர்மானித்துள்ளோம் என்றார்.



# மக்களின் பக்கம் நின்று சிந்திக்க வேண்டும்

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிப்பதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள பெரும்பாலானோர் விரும்புவதாகத் தெரிவித்த அக் கட்சியின் தவிசாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாட்டு மக்களின் குரல்களுக்கு செவிசாய்த்து பாராளுமன்றத்தில் செயற்பட வேண்டியது அவசியம் எனவும் கூறினார்.

நான் முன்வைத்துள்ள கருத்துக்களை நிராகரிப்பதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். நான் கருத்துக்களை முன்வைக்கவில்லை. மாறாக 6 கேள்விகளையே கேட்டிருந்தேன். ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக சாகர அறிவித்துள்ளார். இது தொடர்பான தீர்மானம் எப்போது எடுக்கப்பட்டது? இக் கலந்துரையாடல்களில் யாரெல்லாம் கலந்துக்கொ ண்டிருந்தார்கள்? எங்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது? என்றே நான் சாகரவிடம் வினவியிருந்தேன்

எனது கேள்விக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பெரும்பான்மை யானவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை இடைக்கால ஜனாதிபதியாக்க வேண்டுமென விருப்பம் தெரிவித்தார்கள். அதேபோல் நாட்டு மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும். நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு என்னவென்பது தெளிவாகத் தெரிகிறது. நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டுமென்றே மக்கள் விரும்புகின்றனர். புதிய வழியில் நாட்டை ஆட்சி செய்ய வேண்டும் என்பதே மக்களின் பெரும் தேவையாக இருக்கிறது. எனவே இதன்படியே நாம் பாராளுமன்றத்துக்குள் செயற்பட வேண்டிய தேவை உள்ளது என்றார்.

# ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்




உரிய சட்டவிதிகளுக்கு அமைய பாராளுமன்றத்தின் மூலம் அடுத்துவரும் ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய இன்று (20) நடத்தப்படும் வாக்கெடுப்பை ஜனநாயத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டம் அவருடைய தலைமையில் நேற்று (19) நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார். அடுத்துவரும் ஜனாதிபதியை உரிய சட்ட விதிகளுக்கு அமையத் தேர்ந்தெடுப்பதற்கு இதுவரை அனைத்துத் தரப்பினரும் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய வாக்களிப்புத் தொடர்பான வழிகாட்டல்களை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க இருப்பதாக நாளையதினம் நடத்தப்படும் இரகசிய வாக்கெடுப்பின் போது தெரிவத்தாட்சி அலுவலராகப் பணியாற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

அதேநேரம், பாராளுமன்றத்தை மீண்டும் எதிர்வரும் 27ஆம் திகதி கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள அவசர கால நிலைமை பிரகடனத்தை அன்றையதினம் அனுமதிக்காக சமர்ப்பிக்கவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

# ராஜபக்ஷ யுகம் இனியும் கூடாது



மீண்டும் ராஜபக்ஷ யுகம் ஏற்படக்கூடாது எனவும், நாட்டின் எதிர்காலத்தை நினைத்தே இடைக்கால ஜனாதிபதிக்கான போட்டியிலிருந்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பின்வாங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், சஜித்தின் இத்தீர்மானம் தமக்குப் பெருமையளிப்பதாகவும் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களின் கோரிக்கைக்கு தலை வணங்கியும், நாட்டை அமைதிக்குக் கொண்டு வருவதற்காகவும் இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான போட்டியிலிருந்த விலகி சஜித் பிரேமதாஸ பின்வாங்கியிருப்பதாக தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி நாட்டைப் பற்றி சிந்தித்து மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும ஜனாதிபதியாகவும், எதிர்க்கட்சி தலைவர் பிரதமராகவும் கொண்ட புதிய அரசாங்கத்தை அமைக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

குறுகிய காலத்துக்குள் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு இணையாக அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

மீண்டும் ராஜபக்ஷ யுகம் ஏற்படக்கூடாது எனவும், நாட்டின் எதிர்காலத்தை நினைத்து சில தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுவதாலேயே இடைக்கால ஜனாதிபதிக்கான போட்டியில் இருந்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பின்வாங்கியுள்ளார். பதவிகளைப் பெறுவதற்கு சஜித் அச்சப்படுகின்றார் என்பது இதன் அர்த்தமல்ல. எனவே நாட்டுக்காக சஜித் இத்தீர்மானத்தை எடுத்திருப்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம் என்றார்.

# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றமே வேண்டும்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்காக ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெருமவின் பெயர் முன்மொழியப்பட்டிருப்பமை தனக்கு மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத், நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தின் அடிப்படையில் ஜனாதிபதித் தெரிவு இடம்பெற வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்துக்குள் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான தீர்மானமிக்க நேரம் வந்துள்ளது. அரசியல் ரீதியாக கொள்கை தீர்மானங்களை எடுக்கும்போது பாரதூரமான மாற்றங்கள் அவசியமென சமூகத்தில் கருத்தொன்று வலுப்பெற்றுள்ளது எனவும் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தின் அடிப்படையில் இடைக்கால ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும். இதுவரையில் அரசியல் ரீதியாக காணப்பட்ட பல பிரச்சினைகளுக்கு முடிவுகட்ட வேண்டும். அதேபோல் நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளுக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து முடிவுக்கட்ட வேண்டும் என்றார்.

# 50க்கு மேல் 20 வாக்குகள் டளஸூக்கே கிடைக்கும்



ஜனாதிபதி வாக்கெடுப்புக்கு முன்மொழியப்பட்ட பிரதான இருவர்களான பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோரில், இலஞ்ச, ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுள் இல்லாத நபராகவே டலஸ் இருக்கிறார் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் அவசியமென நாட்டில் கருத்தொன்று உருவாகியுள்ளது. இதனை வைத்துப் பார்க்கும்போது நாமே தீர்மானிக்கவேண்டும்

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள் என அனைவரும் டலஸை ஜனாதிபதியாக்குவதற்கே தீர்மானித்துள்ளனர் .ஜனாதிபதி வாக்கெடுப்பின்போது முதல் சுற்றில் வெற்றி பெறுவதாக இருந்தால் நூற்றுக்கு ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும். டலஸ் அழகப்பெருமவுக்கு 50 சதவீதத்துக்கும் மேலதிகமாக 20 வாக்குகளும் கிடைக்கும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம் எனவும் தெரிவித்தார்.

சர்வக்கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென ஆரம்பத்தில் இருந்தே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கூறிவருகிறார். எனவே, அவருக்குப் பிரதமர் பதவி கிடைப்பதில் எங்களுக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை என்றார்.



# எனது முயற்சி தோல்வியடைந்தது

நாடு முகங்கொடுத்துள்ள தற்போதைய நெருக்கடியான நிலையை கருத்திற்கொண்டு இணக்கப்பாட்டுடன் இடைக்கால ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கு தாம் முயற்சித்ததாகத் தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அந்த முயற்சி தோல்வியடைந்தது எனவும் தெரிவித்தார்.

நாட்டை நிர்வகிக்கக் கூடிய, கற்ற, சர்வதேச நாடுகளுடன் சிறந்த உறவுகளைப் பேணக்கூடிய ஒருவரே நாட்டின் ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற அவசியம் காணப்படுகிறது. எவ்வாறாயினும் இடைக்கால ஜனாதிபதிப் பதவிக்கு மூவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டு ள்ளதாகவும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை நிறுத்தியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுனவில் ஒருவரை முன்மொழிந்துள்ளது. இதனால், அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளில் ஒரு திரிபு நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சர்வதேசத்துடன் நல்லுறவைப் பேணக்கூடி, படித்த, நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்கக்கூடியவருக்கு தனது ஆதரவு எனவும் தெரிவித்தார்.

மன்னாரில் இருந்து வெளிநாடு செல்பவர்களுக்கு

# விசேட பஸ் சேவை

லெம்பட்

மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து கொழும்பு ஊடாக மன்னாருக்கு வருகின்றவர்களுக்குமான விசேட போக்குவரத்துச் சேவையை மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் ஏற்பாடு செய்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிற நிலையில் வெளிநாடுகளிலிருந்து அதிகமானோர் மன்னார் மாவட்டத்துக்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறு கொழும்பிலிருந்து மன்னார் மாவட்டத்துக்கு வருவதற்கு அல்லது மன்னார் மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு செல்வதற்கு



சராசரியாக 70 லீட்டர் எரிபொருள் தேவைப்படுகிறது.

இது வரையில் வெளிநாடு செல்பவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டிருந்தது.

ஆனால், இனி வரும் காலங்களில் எவ்வளவு தொகை ஒரு தனி நபருக்கு செலவிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், அதி சொகுசு பஸ் முகாமையாளர்களிடம் தொடர்புகொண்டு, இவ்வாறு வெளிநாடு செல்பவர்களுக்கு அல்லது வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் கொழும்பிலிருந்து மன்னாருக்கு வருவதற்கு அதி சொகுசு பேருந்து சேவை ஒன்றை மாவட்டச் செயலாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

அந்த வகையில் திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் கொழும்பிலிருந்து மன்னார் மாவட்டத்துக்கும், ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் மன்னாரிலிருந்து கொழும்புக்கு செல்வதற்காக ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு செல்பவர்கள் 0774902440 என்ற கையடக்கத் தொலைபேசியின் ஊடாக தொடர்புகொண்டு, ஆசனங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

அண்மைக்காலமாக மன்னாரில் இருந்து கொழும்புக்கு 1 இலட்சம் ரூபாயும், பேசாலையில் இருந்து கொழும்புக்கு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயும் வாகனக் கூலியாக அறவிடபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆரம்ப பாடசாலைகளை உருவாக்குங்கள்

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் செறிந்து வாழும் மூன்று கிராமங்களில் ஆரம்ப பாடசாலைகளை உருவாக்குமாறு பெற்றோர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில், எள்ளுக்காடு, அன்புபுரம் மற்றும் மணியங்குளம் ஆகிய கிராமங்களில் ஆரம்ப பாடசாலைகளை உருவாக்குமாறு, இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அன்புபுரம் கிராம மாணவர்கள், முழங்காவில் மகா வித்தியாலயத்துக்கும் மணியங்குளம் மாணவர்கள், அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கும் எள்ளுக்காடு கிராம மாணவர்கள், சிவநகர் பாடசாலைக்கும் தற்போது நீண்ட துரம் சென்று வருகின்றனர்.

எனவே, மேற்படி கிராமங்களில் ஆரம்ப பாடசாலைகளை உருவாக்குவதன் மூலம் மாணவர்கள் நீண்ட துரம் பயணிக்க வேண்டிய தேவை இருக்காது என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்ட போதிலும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம் மூன்று கிராமங்களிலும் ஆரம்ப பாடசாலைகளை உருவாக்குவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரியில்

## பாழடைந்த கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

நடராசா கிருஸ்ணகுமார்




கிளிநொச்சி, பூநகரி பிரதேச சபையின் எல்லைப் பரப்பில் உள்ள பாழடைந்த அல்லது அபாயகரமாக துப்பரவு செய்யப்படாது உள்ள கட்டடங்களை அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச சபையின் அமர்வு, தவிசாளர் சி.சிறிரஞ்சன் தலைமையில் நேற்று (19) நடைபெற்றது.

இந்த அமர்வில் புநகரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் பாழடைந்த அல்லது அபாயகரமாக துப்பரவு செய்யப்படாத நிலையில் உள்ள காணிகளால் பொதுமக்கள் பல வகையான அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பாவனையற்ற கட்டடங்களில் மது போதை பாவனை, சமூக சீர்கேடுகள் நடைபெற்று வருவதுடன், பயனற்ற கட்டடங்கள் இடிந்து விடும் நிலையில் உள்ளதனால் உயிர் ஆபத்துகள் ஏற்படுவதாகவும் உள்ளது.

எனவே, பயனற்ற கட்டடங்களை முழுமையாக துப்பரவு செய்து பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்படி, நேற்றிலிருந்து (19) 14 நாட்களுக்குள் குறித்த கட்டடங்களை உரியவர்கள் அகற்றாவிட்டால் பிரதேச சபையால் குறித்த கட்டடங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென மேற்படி சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பாடசாலைக்குள்

## பட்டப்பகலில் சைக்கிள் திருட்டு

க.அகரன்

வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை வளாகத்துக்குள் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

பாடசாலையின் வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கல்விசாரா உத்தியோகத்தர் ஒருவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (18) பிற்பகல் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன், சிசிடிவி காணொளியில் காணப்பட்டுள்ளார்.

கல்விசாரா உத்தியோகத்தர்



அலுவலகத்துக்குள் வேலையில் இருந்தபோது பாடாசாலை வளாகத்துக்குள் நுழைந்த இளைஞன், சைக்கிளைத் திருடி சென்றுள்ளார். சிசிடிவி காட்சிகள் முழுமையாக கிடைக்கப் பெற்றுள்ளன.

இது தொடர்பாக

> **நேற்று முன்தினம் (18) பிற்பகல் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன், சிசிடிவி காணொளியில் காணப்பட்டுள்ளார்**

வவுனியா பொலிஸில் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து, பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியாவில் அண்மைக்காலமாக இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

## இரு குடும்பங்கள் தமிழகத்தில் தஞ்சம்

எம்.றொசாந்த்

இலங்கையில் இருந்து இரு குடும்பங்களை சேர்ந்த 07 பேர் கடல் வழியாக தமிழகத்துக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த 7 பேரையும், தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள ஐந்தாம் மணல் திட்டில் இறக்கி விட்டு, படகோட்டிகள் தப்பிச் சென்ற நிலையில், தகவல் அறிந்த தமிழக கடலோர பாதுகாப்புப் பிரிவினர் அவர்களை மீட்டு, மண்டபம் கடலோர பாதுகாப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியில் வசித்த ஒரு




குடும்பத்தை சேர்ந்த மூவரும் , திருகோணமலை, ஆனந்தபுரி பகுதியில் வசித்த ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வருமே தமிழகம் சென்றுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி, இலங்கையில் இருந்து கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை 123 பேர் தமிழகம் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

# பெட்ரோல் கருப்பு சந்தை

இல்லாதொழிப்பது தொடர்பில் ஆராய்வு

நூருல் ஹுதா உமர்

பெட்ரோல் விநியோகத்தில் கருப்பு சந்தை மற்றும் முறைகேடுகளை இல்லாதொழிப்பது சம்பந்தமான கலந்துரையாடல், சாய்ந்தமருது பிரதேச செயலக ஏற்பாட்டில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் நேற்று (19) நடைபெற்றது.

இதிலே நடைமுறைச் சாத்தியமான பல முடிவுகள் நீண்ட நேர கலந்துரையாடலின் பின்னர் எடுக்கப்பட்டதுடன், முடியுமான அளவு கருப்புச் சந்தையை குறைப்பதற்கான உடன்பாடுகள்



எட்டப்பட்டுள்ளன.

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய எரிபொருள் விநியோக செயற்றிட்டம் நடைமுறைக்கு வரும் வரை சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட செயலி நடைமுறையில் இருக்குமென சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் இதன்போது தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். எம். சம்சுதீன், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள், சாய்ந்தமருது லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிலைய நடத்துநர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் அறிமுகம் செய்யப்பட்ட செயலியை செயல்படுத்தும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## சிலிண்டர்கள் திருட்டு; இளைஞன் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் நீண்ட நாட்களாக வீடுகளை உடைத்துக் கொள்ளையடித்து வந்த 24 வயது இளைஞனை, நேற்று முன்தினம் (18) இரவு கைதுசெய்துள்ளதாக, களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட எரிவாயு வெற்றுச் சிலிண்டர்கள் 6, தங்க ஆபரணங்கள், சிடி பிளேயர், 6,500 ரூபாய் பணம் மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்திய ஆயுதங்கள் ஆகியன இளைஞனிடமிருந்து மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வியாபாரம் நடத்த

## வாகனங்களை அகற்ற கோரிக்கை

எம்.எஸ்.எம். ஹனீபா

அக்கரைப்பற்று பிரதேசத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களால் வர்த்தக நிலையங்களைத் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக கடந்த 03 வாரங்களுக்கு மேலாக வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள், கார் மற்றும் லொறி என்பன நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.


இதனால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, பொதுமக்களும் பல்வேறு அசௌகரீகங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதான வீதி மற்றும்



சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குச் செல்லும் வீதி மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களால் வைத்தியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் ஆகியோர் வைத்தியசாலைக்கு செல்ல முடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பாக அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் பொலிஸார் ஆகியோர் நடவடிக்கை எடுத்து, குறித்த வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



அரசாங்கத்தால்

## யூரியா பசளை விநியோகம்

எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு, யூரியா பசளை நேற்று முன்தினம் (18) மாலை விநியோகிக்கப்பட்டது.

அரசாங்கத்தால் குறைந்த விலையில் முதல் கட்டமாக ஆறாயிரத்து அறுபது மூடைகளில் மூவாயிரம் முடைகள் முதல் கட்டமாக இவ்வாறு விநியோகிக்கப்பட்டன.

ஒரு ஏக்கருக்கு 40 கிலோகிராம் அடிப்படையில் வழங்கப்பட்டன. இதனை விவசாயிகள் ஆர்வத்தோடு பெற்றுச் சென்றார்கள்.

## கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

வடமலை ராஜ்குமார்

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட முன் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, மாவட்டச் செயலாளர் பி.எச்.என். ஜயவிக்ரம தலைமையில், மாவட்டச் செயலகத்தில் நேற்று (19) நடைபெற்றது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் முன் பிள்ளை அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தின் அனுசரணையில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இம்மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை முன் பிள்ளை தேசிய வாரமாக அனுஷ்டிக்கப்படுவதுடன், அதனையொட்டியே இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதனடிப்படையில்



2023ஆம் ஆண்டு முன்பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட இருக்கின்ற வறுமைக் கோட்டுக்குட்பட்ட மற்றும் பெற்றோர்களை இழந்த சிறுவர்கள் முன்னுரிமை அடிப்படையில் இதன்போது தெரிவு செய்யப்பட்டார்கள்.

மொத்தமாக 77 முன் பிள்ளை மாணவர்களுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 14 மாணவர்கள் மாவட்டச் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு, அவர்களுக்கான இந்த கற்றல் உபகரணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

நெருக்கடிக்கு மத்தியிலான

## முன்னெடுப்புகள் குறித்த செயலமர்வு

எம்.எஸ்.எம் நூர்தீன்

“பொருளாதார நெருக்கடியில் ஊடகவியலாளர்கள், சமய தலைவர்கள் எவ்வாறு முன்னெடுப்புகளை முன்னெடுத்தல்” எனும் தலைப்பிலான செயலமர்வு, எகெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு, ஊறணி அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நேற்று (19) நடைபெற்றது.

இதன்போது சம கால போக்கு மற்றும் சிறுபான்மை சமூகங்களின் தீர்வு விடயத்தில் ஊடகவியலாளர்களின் பங்களிப்புப் போன்றைவை தொடர்பில்



விரிவுரைகள் நடைபெற்றதுடன் ,கருத்தாடல்களும் நடைபெற்றன.

மட்டக்களப்பு பல் சமய ஒன்றியத்தின் தலைவர் சிவ சிறீ சிவபாலன் குருக்கள், எஹெட் கரிட்டாஸ் இயக்குநர் அருட்தந்தை ஜீவதாஸ், பல் சமய ஒன்றியத்தின் பிரதித் தலைவர் மௌலவி ஷாஜஹான், ஒன்றியத்தின் இணைப்பாளர்

> **சமகால பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடியுள்ளனர்**

கிறிஸ்டி உட்பட சமய பிரமுகர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

பத்தனையில் அமைக்கப்பட்டுள்ள

# கடைத் தொகுதியில் சிக்கல்

## பத்தனை சந்தியில் ஆர்ப்பாட்டம்: சமூர்த்தி பயனாளிகளுக்கு வழங்குமாறு கோரிக்கை

எஸ்.கணேசன்



பத்தனை சந்தியில் அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதியை சமூர்த்தி பயனாளிகளுக்கு வழங்குமாறு தெரிவித்து, நேற்று முன்தினம் (18) அங்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொட்டகலை - தலவாக்கலை வீதியில் பத்தனை சந்தியில் அமைந்துள்ள கடைத்தொகுதி யாரால் அமைக்கப்பட்டது என்பது உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் குறித்த கடைத்தொகுதி சமூர்த்தி பயனாளிகளுக்கென்று 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதொன்று என்ற கோரிக்கையை முன் வைத்து எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் சமூர்த்தி பயனாளிகளும் அவர்களுக்கு ஆதரவாக அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

கொட்டகலை பிரதேச சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் சுப்ரமணியம் ராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்து கொண்ட மக்கள், எமது பிரதேசத்தில் எமக்கே தெரியாமல் யாரோ கடைத்தொகுதியை அமைத்துள்ளனர். இது தொடர்பாக சில ஊடகங்களில் முழு விபரங்களுடன் கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது.

அதற்குப்பிறகே இது மக்கள் பயன்பாட்டுக்கு ஆரம்பிக்கப்பட்டதென்ற விபரம் தெரியவந்துள்ளது. எனவே தனிநபர்களால் இவ்விடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தெளிவாகியுள்ளது. இதை மக்களுக்கே வழங்க வேண்டும் எனக் கோருகிறோம். எம்மால் சமூர்த்தி சேவைகளைப் பெற தலவாக்கலை வரை பயணிக்க முடியாது என்று கூறினர்.

இவ் ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கிய பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ராஜா கூறுகையில்,

இந்த கட்டிடம் அமைந்ததன் பின்னணியில் பல ஊழல்கள் அரங்கேறியுள்ளன. இது குறித்து நான் கடந்த இரண்டு வருடங்களாக கேள்வி எழுப்பியும் கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் சரியான பதில்களை எனக்கு வழங்கவில்லை. தமக்கும் இந்த கட்டிடத்துக்கும் சம்பந்தமில்லை என்கிறார். அருகிலுள்ள ஆலய நிர்வாக சபையினால் இது 2008ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது என்கிறார்.

இந்த ஆலயத்துக்கு அப்படி ஒரு நிர்வாக சபையே கிடையாது. ஏனென்றால் நான் இந்த பகுதியை சேர்ந்த உறுப்பினர். 2008ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு எவ்வாறு 2022ஆம் ஆண்டு கட்டிடம் கட்ட முடியும்? தனது நிர்வாக எல்லைக்குள் இருக்கும் பகுதியில் ஒரு கட்டிடம் எழுவதை எவ்வாறு பிரதேச சபை நிர்வாகம் பார்த்துக்கொண்டிருந்தது? இதன் பின்னணி சூழ்ச்சி வெளிக்கொணர வேண்டும். இது மக்களுக்கு சேர வேண்டியது. சரியான பதில்கள் எமக்குக் கிடைக்காவிடின் எமது போராட்டம் தொடரும் என்றார்.

இது தொடர்பில் பிரதேச சபைத் தவிசாளர் ராஜமணி பிரசாத் விளக்கமளிக்கையில்,

கொட்டகலை பிரதேச சபை 2018ஆம் ஆண்டு தான் ஆரம்பிக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு நுவரெலியா பிரதேச சபையினால் குறித்த ஆலய நிர்வாகத்துக்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாம் இந்த கட்டடத்துக்கு எவருக்கும் அனுமதி வழங்கவில்லை. எம்மிடம் எவரும் அனுமதி பெறவும் இல்லை. இது குறித்து வாய் மூலமும் எழுத்து மூலமும் கேள்வி எழுப்பிய அனைவருக்கும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் நுவரெலியா பிரதேச சபையால் வழங்கப்பட்ட அனுமதியின்படி கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. நாம் இது குறித்து ஆலய நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பியுள்ளோம். அவர்கள் அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர். இந்த திட்டத்தை புதுப்பிக்கும் படி கோரியுள்ளோம் என்றார்.



தலவாக்கலை –லிந்துலை நகர சபைக்குரிய

# நூலகங்களின் குறைப்பாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை

சுஜிதா

தலவாக்கலை -லிந்துலை நகர சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதியில் இயங்கும் பொது நூலகங்களின் குறைபாடுகள் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நகர சபையின் கேட்போர் கூடத்தில் நகர சபையின் தவிசாளர் சந்தன குணதிலக தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் நூலகங்களின் ஆளணி பற்றாக்குறை, தேவையான நூல்களின் கொள்வனவு, நடமாடும் நூலக செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

தற்போது நிலவும் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் தலவாக்கலை நூலகத்திற்கு நிரந்தர நூலக உத்தியோகத்தர் ஒருவரை பிரிதொரு நூலகத்திலிருந்து பெற்று தருவதாகவும் தற்போது தற்காலிக ஊழியர்களாக பணியாற்றி வருவோரை நிரந்தர நியமனம் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் நகர பிதா உறுதி அளித்தார்.

மேலும் நூலகத்திற்கு தேவையான நூல்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

தற்போதைய எரிபொருள் மற்றும் பொருளாதார பிரச்சனைகள் காரணமாக நடமாடும் நூலக சேவையை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு நூலகத்தின் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்யுமாறு நகர பிதா தெரிவித்தார்.

# பொண்மணி அறக்கட்டளை நிதியத்தின் உதவி...



ஜேர்மனை தலைமையகமாக கொண்டு இயங்கும் பொண்மணி அறக்கட்டளை நிதியத்தால், ஹட்டன் வெலிஓயா– மேற்பிரிவில் உள்ள ஐம்பது குடும்பங்களுக்கு உலருணவு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை பொண்மணி அறக்கட்டளை நிதியத்தின் இயக்குனர், குமாரசிங்கம் முத்துகுமாரால், வெலிஓயா சமூக அபிவிருத்தி ஒன்றியத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளை செலுத்திய

# மாணவன் பலி

சேஹ்ன் செனவிரத்ன



பாடசாலை மாணவனொருவன் செலுத்திய மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் குறித்த மாணவன் உயிரிழந்த சம்பவம், அலதெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உல்லதுபிட்டிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

அத்துடன் குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றுமொரு நபரும் கடுங் காயங்களுக்கு உள்ளாகி பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த மாணவன், நுகவெல மஹா வித்தியாலயத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்ற 17 வயது மாணவன் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவன் செலுத்திய மோட்டார் சைக்கிளின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல், மதிலொன்றில் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என அலதெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த மாணவனிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை. என்பதுடன், மாணவனும் அவருடன் பயணித்த நபரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மாணவனிடம் மோட்டார் சைக்கிளை வழங்கிய உரிமையாளருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# டெங்குவால் கேகாலையில் இருவர் மரணம்

என்.ஆராச்சி



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால், கேகாலையில் இருவர் மரணமடைந்துள்ளனர். 1,212 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என கேகாலை பிரதேச தொற்று நோய் பிரிவின் வைத்திய நிபுணர் சுஜீவ பண்டார தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தின் 11 சுகாதார வைத்திய பிரிவுகளிலும் டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இதில் கேகாலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே அதிக நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

கேகாலை சுகாதார பிரிவில் 234 பேரும் மாவனெல்ல சுகாதார பிரிவில் 229 பேரும் தெஹியோவிட்ட சுகாதாரப் பிரிவில் 159 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

டெங்கு மரணங்கள் இரண்டும் தெஹியோவிட்ட மற்றும் கேகாலை ஆகிய சுகாதார பிரிவுகளில் பதிவாகியுள்ளன என்றார்.

கடந்தாண்டு இதே காலப்பகுதியில் கேகாலை மாவட்டத்தில் 630 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றார்.

எனவே, மூன்று நாட்களுக்கு அதிகமாக காய்ச்சல், உடல் வலி, வாந்தி, கண்ணின் கீழ் பகுதியில் வீங்குதல் போன்றன டெங்கு நோயின் அறிகுறிகள் எனத் தெரிவித்த அவர், இவ்வாறு நோயின் அறிகுறி காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.



எரிபொருள் வருகையால்

# தவலந்தனை நகரில் வாகன நெரிசல்

ஆ.ரமேஸ்


தவலந்தன்னை நகரில் நேற்று (19) கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

தவலன்தன்னை நகரில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்திற்கு நேற்று (19) காலை எரிபொருள் கொண்டுவரப்பட்டதால், நுவரெலியா-புஸ்ஸலாவை பிரதான வீதியின் ஏற்பட்டுள்ள வாகன நெரிசல் காரணமாக (19) காலை 08மணி முதல் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது.

இதேவேளை, குறித்த தவலந்தன்னை ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முறைக்கேடாக எரிபொருள் விநியோகிக்கப்படுவதாகவும் , எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் தமக்கு தேவையானவர்களுக்கு முன்னுரிமையளித்து எரிபொருள் வழங்குவதாகவும் குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

# சீல் வைத்த பூட்டு உடைப்பு

சுதத்.எச்.எம்.ஹேவா



ஹட்டன்- டிக்கோயா நகர சபையால் சீல் வைத்து மூடப்பட்ட வர்த்தக நிலையம் ஒன்று, உடைக்கப்பட்டு உள்நுழைந்துள்ளமை தொடர்பில் ஹட்டன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

ஹட்டன்- பழைய சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தகக் கட்டடம் நகர சபைக்கு சொந்தமான நிலையில், அதன் உரிமையாளர் உயிரிழந்துள்ளார்.

குறித்த உரிமையாளர் உயிரிழப்பதற்கு முன்பு தனது வர்த்தக நிலையத்தை தனது மகளுக்கும் மனைவிக்கும் வழங்குமாறு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதால், அவர்களுக்கு அதனை வழங்க நகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில், அந்த வர்த்தக நிலையத்தை வேறு சிலர் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதால் நகர சபை மூலம் சீல் வைத்து அந்த வர்த்தக நிலையம் மூடப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலையில் அதனை கையகப்படுத்த முயன்ற நபர், தற்போது நகர சபையின் பூட்டை உடைத்து வர்த்தக நிலையத்துக்குள் நுழைந்துள்ளார். இதனால் அந்த நபருக்கு எதிராக ஹட்டன் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

# அங்கத்தவரானார் ஊடகவியலாளர்



மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி அங்கத்தவராக கம்பளையைச் சேர்ந்த தமிழ்மிரர் ஊடகவியலாளர் எஸ். லோகேஸ்வரன் நியமிக்கப்பட்டு உள்ளார்.

அவருக்கான மனித உரிமை பாதுகாப்பு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு கம்பளையில் நடைப்பெற்றது.

மனித உரிமை பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையத்தின் தலைவர் எம்.எஸ்.எம் நசார் தலைமையில், அடையாள அட்டை வழங்கி வைக்கப்பட்டது.

# பூத்து குலுங்குகிறது ரொபரோசியா மலர்கள்

பாலித ஆரியவன்ஸ

பதுளை நகரத்தில் தற்போது ரொபரோசியா மலர்கள் அழகாக காணப்படுகின்றன.

வருடத்துக்கு ஒரு தடவை அல்லது இரு தடவைகள் பூக்கும் அந்தப் பூ பதுளை நகரில் பூத்து குலுங்குகிறது



# மக்கள் பிரதிநிதிகளின் கைகளுக்குள் இடைக்கால ஜனாதிபதி

2022 ஜூலை 20 ஆம் திகதியும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும். இடைக்கால ஜனாதிபதியொருவர் மக்கள் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்படவிருக்கின்றார். அதற்கான இரகசிய வாக்கெடுப்பு, பாராளுமன்றத்தில் இன்று (20) நடைபெறவிருக்கின்றது.

இதற்கான வேட்புமனுக்கள் நேற்று (19) ஏற்றுக்கொள்ளப்பட்டன. சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகபெரும, அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் பெயர்கள் வெளிப்படையாகவே அடிபட்டன. தானும் போட்டியிடப்போகின்றேன் என வெளிப்படையாக பிரசாரம் செய்யாவிடினும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கான காய்நகர்தல்களை கச்சிதமாய் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், இந்த தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தான் விலகிக்கொண்டு, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான டலஸ் அழகபெருமவை ஆதரிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்து, முன்மொழிந்தார். ஆகையால், இன்றைய களத்தில் பதில் ஜனாதிபதியுடன் சேர்த்து மூன்று வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

இடைக்கால ஜனாதிபதிக்காகப் போட்டியிடவிருப்போரின் ஆதரவைத் திரட்டிக்கொள்ளும் வகையில் பல கட்சிகளுக்கு இடையில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவையெல்லாம் அதிகாரத்தை பிடித்துக்கொள்ளும் வகையிலேயே அமைந்திருந்தன எனினும், இடைக்கால வேலைத்திட்டம் எவையும் முன்வைக்கப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க, சர்வகட்சி அரசாங்கம், ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களை தண்டிக்கவேண்டும், பழைய வழக்குக் கோவைகளை தூசிதட்டி மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் மற்றும் குறுகிய காலத்துக்குள் பொதுத்தேர்தல் உள்ளிட்டவற்றை முன்வைத்திருந்தார். அவருக்கான வெற்றிவாய்ப்பு குறைவாக இருக்கிறது ஏனைய இரண்டு வேட்பாளர்களுக்கும் இடையிலேயே போட்டிகள் நிலவுகின்றன.

எமது நாட்டை பொறுத்தவரையில், மக்கள் பிரதிநிதிகளால் இடைக்காலத்துக்கு ஜனாதிபதியொருவர் நியமிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும். இதற்கு முன்னர், 1993 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதியன்று அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ, விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர், பதில் ஜனாதிபதியாக பிரதமர் டி.பீ. விஜேதுங்க கடமையை ஏற்றார்.

இடைக்கால ஜனாதிபதியை நியமிப்பதற்கான வேட்புமனுக்கோரலின் போது, அவருக்கு எதிராக எவருமே போட்டியிடவில்லை என்பதால், இடைக்கால ஜனாதிபதியாக ஏகமனதாக நியமிக்கப்பட்டார். இன்றைய நிலைமை தலைகீழாக இருக்கின்றது.

இடைக்கால ஜனாதிபதியாக யார்? நியமிக்கப்பட்டாலும் அவருக்கு முன்பாக உடனடியாக தீர்க்கப்படவேண்டிய மக்களின் பிரச்சினைகள் பல சவாலாக இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மக்களின் வயிற்றுப் பசிக்கு தீர்வு காணும் வகையிலான திட்டங்களை முன்னெடுக்காது அல்லது கணக்கிலெடுக்காது செயற்படுவார் எனின், அவருக்கு எதிராகவும் மக்கள் கிளர்ந்தெழுவர் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆக, மக்களின் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து, வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதே, இடைக்கால ஜனாதிபதியின் முன்பாக இருக்கும் சவால்களில் பிரதான சவலாகும் என்பதை நினைவூட்டுகிறோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எல்லாத் தேவைகளும் ஆடம்பரம் நிறைந்ததாக இருந்தாலும் கூட, கடவுளிடம் ஏகப்பட்ட கோரிக்கைகளை ஒன்றன்பின்னர் ஒன்றாக மனிதர்கள் வைக்கின்றார்கள்.

கடவுளிடம் இலஞ்சம் தருவதாகப் பேரம் பேசுவதுபோல், 'இந்த வேலையை முடித்துத் தந்தாய் என்றால், பல இலட்சம் செலவில் தர்மகாரியங்கள், பூஜைகள் செய்வேன்' எனப் பெரிய வேண்டுதல்களைச் செய்வார்கள்.

சகல உயிர்களையும் காக்கும் தெய்வத்தை, வியாபாரம் செய்வதுபோல் அறியாமையில் பேசும் நபர்கள் சுயநலமுடைய அறிவிலிகள்.

நேர்மையுடன், பக்தியுடன் வேண்டுவதற்கும் ஆணவத்துடன் 'இதைத் தா, நான் செய்வேன்' என வேண்டுவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இரண்டாது வெட்கப்பட வேண்டிய முறையாகும். கடவுளிடம் பக்தியுடன் எதைக் கேட்டாலும் கேட்காது விட்டாலும், கடவுள் கிருபை செய்தபடியேதான் இருக்கின்றார் என்பதில் ஏது ஐயம்?

எதையும் செய்யாமல் சோம்பித் திரிபவர்கள், குடும்பத்தினரைக் கண்டுகொள்ளாமல் மனம்போன போக்கில் சுற்றித் திரிந்து, அறவழி நடக்காதவர்களை எவர்தான் விரும்புவார்?

எதையாவது பெறத்தான் விரும்பும் சிலர், கொஞ்சமாவது மக்களை நேசிக்கும் பண்பை ஏன் கண்டுகொள்வதில்லை? மனிதன் தனித்தவன் இல்லை; சகலருடனும் இணைந்து செயலாற்ற வேண்டியவன்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# புதிய ஜனாதிபதி வருகிறார், நெருக்கடி காத்திருக்கிறது



எம்.எஸ்.எம். ஐயூப்

இன்று, 2022 ஜூலை 20 இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியமாக நாளொன்றாகும். நாடு மிகப் பெரும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் ஜனாதிபதி ஒருவரை பாராளுமன்றம் தெரிவு செய்யப் போகிறது.

வரலாறு காணாத மக்கள் எழுச்சியொன்றின் காரணமாக கடந்த 13 நாட்டை விட்டு மாலைதீவு ஊடாக சிங்கப்பூருக்குத் தப்பியோடிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிங்கப்பூரிலிருந்து கடந்த 14 ஆம் திகதி தமது பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்தே இந்த ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத்தில் நடைபெறுகிறது.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பொன்று நடைபெறும் முதலாவது முறை இதுவாகும். அரசியலமைப்பின் பிரகாரம். தமது பதவிக் காலத்தின் இடைநடுவில் ஒரு ஜனாதிபதியின் இறப்பு, இராஜினாமா, பிரஜா உரிமை இழப்பு, பதவிக் காலம் அரம்பமாகி இரண்டு வாரங்களுக்குள் பதவி ஏற்காமை, குற்றப் பிரேரணை முலம் பதவி நீக்கம், தேர்தல் வழக்கொன்றில் தோல்வியடைதல் ஆகிய காரணங்களால் ஜனாதிபதி பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டால் பாராளுமன்றத்திலேயே புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.

பாராளுமன்றத்தால் ஜனாதிபதி தெரிவு செய்யும் இரண்டாவது முறை இதுவாகும். முதலாவது முறை வாக்கெடுப்பு நடைபெறவில்லை. 1993 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்கொலை குண்டுதாரி ஒருவரால் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிமேதாச படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அப்போதைய பிரதமர் டி.பி விஜேதுங்க உடனடியாக பதில் ஜனாதிபதியானார். பின்னர் பாராளுமன்றத்தில் நடைபெற்ற தேர்தலின் போது சகல கட்சிகளினதும் இணக்கத்தில் விஜேதுங்கவுக்கு எதிராக வேறு எந்தவொரு வேட்பாளரும் நிறுத்தப்படாமையால் அவரே பிரேமதாசவின் பதவிக் காலத்தில் மிகுதியாக இருந்த ஒன்றரை ஆண்டு காலத்துக்காக ஜனாதிபதியாக ஏகமனதாக தெரிவானார்.

இம்முறை கோட்டாபய இராஜினாமா செய்ததன் பின்னர் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியானார். இன்று(20) பாராளுமன்றத்தில் நடைபெறும் தேர்தலில் ரணிலும் போட்டியிடுவதாக அப்போதே செய்திகள் வெளியாகின. அவருக்கு எதிராக மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என நேற்று முன்தினமே (ஜூலை 17) உத்தியோகப்பற்றற்ற முறையில் கூறப்பட்டது.

இந்தத் தேர்தலில் சில விந்தையான சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. கடந்த பொதுத் தேர்தலின் போது பாராளுமன்றத்துக்குக் தெரிவு செய்யப்படுவதற்காக போதிய வாக்குகள் ரணிலுக்கு கிடைக்கவில்லை. தேசிய பட்டியல் மூலமே அவர் பாராளுமன்றத்தில் இடம்பிடித்துக் கொண்டுள்ளார். அந்த ஒரேயொரு ஆசனத்தை வைத்துக் கொண்டு அரசியல் நெருக்கடியைப் பாவித்து அவர் பிரதமரானார். இப்போது அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றார்.

அவர் பொதுத் தேர்லில் போட்டியிட்டார். ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும் அதன் தலைவர்கள் இன்று தலைமை தாங்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியும் ஐ.தே.க.வையும் ரணிலையும் தேசத்துரோகிகளாகவே எப்போதும் பொது மக்களுக்கு எடுத்துரைத்தனர். அவர்கள், புலிகளின் நண்பர் என்றனர். புலிகளுக்கு நாட்டை தாரைவார்க்க முயல்வதாக அவர் மீது குற்றஞ்சாட்டினர். அவர் ஏகாதிபத்தியவாத நாடுகளின் அடிவருடி என்றனர். சிங்கள- பௌத்த கலாசாரத்தை மதிக்காதவர் என்றனர். மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் சூத்திரதாரி என்றனர்.

ஆயினும், கடந்த மே மாதம் 9 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரை பிரதராக நியமித்தார். அவருக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை வழங்க பொது ஜன முன்னணியினர் இணக்கம் தெரிவித்தனர். தாமே சிங்கள- பௌத்த பண்பாட்டின் பாதுகாவலர்கள் என்று கூறியவர்களின் உண்மையான இனம் மற்றும் சமயப் பற்றும் அதன் மூலம் அம்பலமாகியது.

அதனையடுத்து பசில் ராஜபக்ஷ, ரணிலை பிரதமர் பதவியில் இருந்து விரட்ட சதி செய்வதாக செய்திகள் பரவின. அதற்கிடையே மக்கள் எழுச்சியால் கோட்டாபய நாட்டை விட்டு தப்பியோட வேண்டிய நிலை ஏற்பட்டது. பசிலும் 2023மார்ச் திரும்பி வரும் வகையில் விமான டிக்கெட்டுகளை தயார் செய்து கொண்டு விமான நிலையத்துக்குச் சென்ற போது மக்களின் எதிர்ப்பின் காரணமாக மீண்டும் திரும்பி வந்தார்.

அதன் பின்னர் அவரது தந்திரோபாயம் மாறிவிட்டது. துரோகியைப் போல் தமது கட்சியாலேயே பட்டம் சூட்டப்பட்ட ரணிலை ஜனாதிபதியாக்க அவர் நடவடிக்கை எடுத்தார். ரணிலைக் கொண்டு போராட்டம் நடத்தும் குழுக்களை அடக்கிவிட்டு மீண்டும் அரசியலையும் பொருளாதாரத்தையும் கைப்பற்றிக் கொள்வதே அவரது நோக்கம் எனத் தெரிகிறது.

ஆனால், அவரது திட்டம நிறைவேறினால் உண்மையான வெற்றியாளனாகப் போவது ரணிலே. ஏனெனில் நேற்று வரை ரணிலின் பிரதமர் பதவி பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற பெரும்பான்மையின் மீதே தங்கியிருந்தது.

ஆனால், இன்றைய தேர்தலில் ரணில் வெற்றி பெற்றால் அவர் நிறைவேற்று ஜனாதிபதியாவார். அவருக்கு அதன் பின்னர் பொதுஜன முன்னணியின் பெரும்பான்மை தேவையில்லை. அவர் அதற்குப் பின்னர் பசிலை பொருட்படுத்தப் போவதில்லை. அது அவரது சுபாவம். அவர் மற்றொருவரின் கீழ் இயங்கத் தயாரில்லை. சந்திரிகாவுடனும் மைத்திரிபாலவுடனும் மோதல் ஏற்படுவதற்குக் காரணமும் அதுவே.

முன்னணியின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இப்போது சிதறிப் போயுள்ளது. எனவே ரணில் ஜனாதிபதியானால் அவரை கட்டுப்படுத்த குற்றப் பிரேரணை கொண்டு வருவதாக மிரட்டுவதும் இனி கஷ்டமாகும். அப்போது ஒரு பாராளுமன்ற ஆசனத்தை பெறுவதற்காகவேனும் எந்தவொரு மாவட்டத்திலிருந்தும் போதிய வாக்குகளைப் பெறாத கட்சியொன்றின் தலைவர் நிறைவேற்று ஜனாதிபதியாக இருப்பார். அதற்கும் பெயர் ஜனநாயகம் தான்.

எனினும், இந்தத் தேர்தலில் தாம் போட்டியிடுவதாக ரணில் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் அறிவித்திருக்கவில்லை. ஊடகங்களில் வெளியான நான்கு பேரில் சஜித் பிரேமதாச, டலஸ் அழகப்பெரும மற்றும் அனுரகுமார திஸாநாக்க ஆகிய மூவர் மட்டுமே தாம் போட்டியிடுவதாக அறிவித்திருந்தனர்.

அவர் பதில் ஜனாதிபதியாக உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதலைப் பற்றி மீண்டும் விசாரணைகளை ஆரம்பிப்பதாக அறிவித்தார். இது ஆறு நாட்களுக்கு ஜனாதிபதியாகும் பதில் ஜனாதிபதி ஒருவர் அவசரமாக செய்ய வேண்டிய விடயமல்ல. இது இன்றைய ஜனாதிபதித் தேர்தலின் போது கத்தோலிக்க எம்பிக்களின் வாக்குகளை பெறுவதற்கான உத்தியாக இருக்கலாம்.

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தின் போது வீடுகள் எரிக்கப்பட்ட எம்.பிக்களுக்கு தனித்தனியாக தொலைபேசி அழைப்புக்களை கொடுத்து அந்த வீடுகளை புனரமைப்புச் செய்து தருவதாக ரணில் கூறினார் என செய்திகள் கூறின. இதுவும் பதில் ஜனாதபதி ஒருவரால் செய்யக்கூடியதொன்றல்ல. இது அந்த எம்.பிக்களின் வாக்குகளை பெறுவதற்காக செய்த அறிவித்தலாகவே தெரிகிறது.

ஜனாதிபதியின் பெயருக்கு முன்னால் 'அதிமேதகு' என்று பாவிப்பதில்லை என்றும் ஜனாதிபதியின் கொடியை இரத்துச் செய்வதாகவும் அவர் கூறியிருக்கிறார். ஆறு நாட்களுக்கு ஜனாதிபதியாகும் ஒருவர் இவ்வாறான முடிவுகளை எடுக்க வேண்டுமா? இது ஜனரஞ்சகமாவதற்கான முயற்சியாகவே தெரிகிறது.

பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதாக அறிவிப்பு வருமுன்னரே ரணில் 13 ஆம் திகதியே அவசரகால ஊரடங்குச் சட்டங்களைப் பிறப்பித்தார். ஆர்ப்பாட்ட-க்காரர்களால் கைப்பற்றப்பட்டு இருந்த ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி அலுவலகம், அலரிமாளிகை மற்றும் பிரதமரின் அலுவலகம் அகியவற்றை மீட்டெடுக்குமாறு பாதகாப்பு படையினரை பணித்தார்.

இவை அவர் தேர்தலை மனதில் வைத்து செய்திருக்க மாட்டார் ஆனால் அதன் மூலம் பொதுஜன முன்னணியினரை மகிழ்ச்சியுறச் செய்ய அவரால் முடிந்தது. அக்கட்சி இந்த நடவடிக்கைகளை அங்கிகரித்து அறிக்கையொன்றையும் வெளியிட்டது.

சஜித் மற்றும் டலஸ் ஆகியோர் இணைந்து இருவரில் ஒருவர் மட்டும் போட்டியிட்டால் மட்டுமே ரணிலின் வெற்றி வாய்ப்பை சிலவேளை தடுக்கலாம். போட்டியிடும் ஏனைய மூவரில் ஒருவரை ஆதரித்தால் நாளை நாடு மீண்டும் பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது தமது செயலை நியாயப்படுத்த முடியாமல் போகும் என்பதாலேயே அனுர போட்டியிடுகிறார் போலும்.

எவர் ஜனாதிபதியானாலும் மிக விரைவில் எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் மீண்டும் நாட்டில் கொந்தளிப்பான நிலைமை உருவாகும். அரசியல் காரணங்களுக்கான போராட்டங்களை அடக்குமுறை மூலம் கட்டுப்படுத்துவது சிலவேளை இலகுவாகலாம் ஆனால் பொருளாதார பிரச்சினைகளால் வெறிகொண்டு எழும் மக்களை கட்டுப்படுத்த அடக்குமுறையை பிரயோகித்தால் பெரும் அழிவிலேயே அது முடியும். எனவே, சர்வதேச நாணய நிதியம் கைகொடுக்கும் வரை தாக்குப் பிடிப்பதே புதிய ஜனாதிபதியின் முன்னுள்ள சவாலாகும்.

## கடிதங்கள்

# சேவையை நடத்துங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக பேருந்து சேவைகள் இடம்பெறாத கிராமங்களுக்கு நடமாடும் வைத்திய சேவையை நடத்துவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென போக்குவரத்து வசதிகள் இல்லாத கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவின் தண்ணிமுறிப்பு கிராம அலுவலர் பிரிவின் ஆறுமுகத்தான்குளம் கிராமத்திற்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒதியமலை, அம்பகாமம் போன்ற பல கிராமங்களுக்கும் மாந்தை கிழக்கின் சிறாட்டிக்குளம் போன்ற பல கிராமங்களுக்கும் துணுக்காயின் ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, தேராங்கண்டல், புத்துவெட்டுவான், அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம், தென்னியங்குளம், உயிழங்குளம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் பேருந்து சேவைகள் நடைபெறாத கிராமங்களுக்கு குறைந்தது 15 நாட்களுக்கு ஒரு தடவை நடமாடும் வைத்திய சேவையினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

புதுடெல்லி

கள்ளக்குறிச்சி மாணவியின் விவகாரம்

# மறு உடற்கூராய்வை நிறுத்த நீதிமன்றம் மறுப்பு

கள்ளக்குறிச்சி மாணவியின் மறு உடற்கூராய்வை இடைநிறுத்தி வைக்க உத்தரவிட முடியாது என்று உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

கள்ளக்குறிச்சி தனியார் பள்ளியில் படித்து வந்த பிளஸ் 2 மாணவி மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கூறி மாணவியின் தந்தை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றக் கோரியும், மாணவியின் உடலை மறு உடற்கூராய்வு செய்ய உத்தரவிடக் கோரியும் அவர் மனு தாக்கல் செய்திருந்தார்.



இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற தனிநீதிபதி சதீஷ்குமார், 3 அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஓய்வுபெற்ற தடயவியல் அதிகாரி ஆகியோர் அடங்கிய குழுவை நியமித்து, மாணவியின் உடலை மறு உடற்கூராய்வு செய்ய உத்தரவிட்டிருந்தார். இந்த மருத்துவக் குழுவில் தங்களது தரப்பைச் சேர்ந்த மருத்துவரை உடனிருக்க அனுமதி கோரிய முறைப்பாட்டாளரான மாணவியின் தந்தையின் கோரிக்கையை முறையீட்டை சென்னை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிலையில் மாணவியின் தந்தை தரப்பில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, என். வி.ரமணா தலைமையிலான அமர்வின் முன்னிலையில், மறு உடற்கூராய்வின்போது, தங்கள் தரப்பு மருத்துவரை உடனிருக்க அனுமதிக்க கோரியும், அதுவரை மறு உடற்கூராய்வை நிறுத்தி வைக்க உத்தரவிடக் கோரியும் முறையீடு செய்யப்பட்டது.



புதுச்சேரி

## புளூ சட்டை மாறனின் உருவ பொம்மை எரிப்பு

தமிழ் திரைப்பட இயக்குனர் பார்த்திபன் நடித்து இயக்கிய உள்ள இரவின் நிழல் படம் கடந்த வாரம் வெளியானது. இந்த நிலையில் சினிமா விமர்சகர் புளூ சட்டை மாறன் யு-டியூப்பில் இந்த படம் குறித்து கடுமையாக விமர்சித்ததாக கூறப்படுகிறது.

இதனை கண்டித்து புதுச்சேரி- கடலூர் சாலையில் உள்ள வணிக வளாகம் எதிரே பார்த்திபன் ரசிகர்கள் சங்க தலைவர் பாண்டி செல்வம், செயலாளர் குமரன் ஆகியோர் தலைமையில் நிர்வாகிகள் கூடினர். அவர்கள் திடீரென்று புளூ சட்டை மாறன் உருவ பொம்மையை தீ வைத்து எரித்து கோஷங்கள் எழுப்பினர்.இதனால் அங்கு சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

புதுடெல்லி

9 மாநிலங்களில்

## இந்துக்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து கேட்டு வழக்கு

இந்தியாவில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், புத்த மதத்தவர், பார்சிக்கள், சீக்கியர்கள், ஜெயின் சமூகமென 6 மதங்களைச் சேர்ந்தவர்கள் மதசிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்து மத தலைவர் தேவகி நந்தன் தாக்குர் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில்: பஞ்சாப், காஷ்மீர், மிசோரம், நாகாலாந்து, மேகாலயா, மணிப்பூர், கேரளா, அருணாச்சல் பிரதேசம், லட்சத்தீவுகள் ஆகிய 9 மாநிலங்களில் இந்துக்கள் குறைந்த அளவில் உள்ளனர்.

> **இந்த 9 மாநிலங்களில் இந்துக்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து தர வேண்டும் வலியுறுத்தியுள்ளார்**

அவர்களுக்கு அங்கே சிறுபான்மையினர் என்ற அந்தஸ்து கிடைப்பதில்லை. கல்வி நிலையங்களில் அவர்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. அதன்படி இடஒதுக்கீடும் கிடைப்பதில்லை. இந்துக்கள் சிறுபான்மையினராக இருக்க முடியாது என்ற பொதுவான கருத்தும் நிலவுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த 9 மாநிலங்களில் இந்துக்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து தர வேண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை

## சிறுமியின் 28 வார கருவை கலைக்க அனுமதி

பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான சிறுமியின் 28 வார கருவை கலைக்க அனுமதி அளித்து,சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 13 வயது சிறுமி, பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதில், கருவுற்றார். அவரது கர்ப்பத்தை கலைக்க அனுமதி கோரி, பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை, வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பாதிக்கப்பட்டவரின் மனம், உடல் நலம், மருத்துவர்களின் பரிந்துரையை கருத்தில் கொண்டு, 20 வாரங்களை கடந்த கருவையும் கலைக்க உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதைச் சுட்டிக்காட்டினார். பின்னர், சிறுமியின் எதிர்காலம் மற்றும் மருத்துவர்களின் பரிந்துரை அடிப்படையில், 28 வாரங்கள் 3 நாள்கள் கடந்த கருவை கலைக்க அனுமதியளித்து நீதிபதி உத்தரவிட்டார்.

ஜார்கண்டு

## ஜீன்ஸுக்கு தடையான கணவரை கொன்ற மனைவி



திருமணத்திற்கு பின் ஜீன்ஸ் அணிய தடை விதித்ததால் கணவரை, மனைவி குத்தி கொலை செய்த அதிர்ச்சிக்குரிய சம்பவம் ஜார்க்கண்ட் மாநிலத்தில் நிகழ்ந்துள்ளது.

கிராமத்தில் நடைபெற்ற கண்காட்சிக்கு இருவரும் சென்றுள்ளனர். கண்காட்சியை சுற்றிப் பார்த்துவிட்டு இருவரும் வீடு திரும்பிய நிலையில், மனைவியின் உடை தொடர்பாக இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. திருமணத்துக்குப் பின்னர் ஜீன்ஸ் அணிவது முறையல்ல என கணவர் கண்டிதுள்ளார். ஆனால், கணவரின் பேச்சை கேட்க மறுத்து மனைவி தொடர்ந்தும் ஜீன்ஸ் அணிந்துள்ளார்.

அன்றையதினம், வீடு திரும்பிய பின்னர் இருவருக்கும் இது தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் பெரும் சண்டையாக வெடித்துள்ளது. இந்த சண்டை முற்றியதில் மனைவி தனது கணவரை கத்தியால் குத்தியுள்ளார். படுகாயம் அடைந்த கணவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.




புதுடெல்லி

## எதிர்க்கட்சியினர் அமளி: ராகுல் காந்தியும் பங்கேற்பு

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் (18) முதல் நடைபெறுகின்றது. முதல் நாளில், அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் 5 சதவீத ஜி.எஸ்.டி. வரியை திரும்பப் பெற வலியுறுத்தி இரு அவைகளிலும் போராட்டம் நடத்தியதால் இரு அவைகளும் முடங்கின.

இந்நிலையில், இரண்டாம் நாளான நேற்று (19) கூட்டம் தொடங்கியவுடன் விலை உயர்வு குறித்து விவாதிக்க எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கை மறுக்கப்பட்டதால் இரு அவைகளிலும் எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபடத் தொடங்கினர்.

மக்களவையில் பதாகைகளை ஏந்தி அவைத் தலைவரின் இருக்கை அருகே வந்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர். எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கலந்து கொண்டார்.

திருவனந்தபுரம்

## மாணவிகளின் உள்ளாடைகளை கழற்றி சோதனை



நாடு முழுவதும் மருத்துவ படிப்புகளில் சேருவதற்கான நீட் தேர்வு கடந்த 17ஆம் திகதியன்று நடைபெற்றது.

கட்டுப்பாடுகளுடன் நடந்த இந்த தேர்வில் மாணவிகளுக்கு பலத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதில் கேரளா மாநிலம் கொல்லத்தில் தேர்வு எழுத சென்ற மாணவிகளிடம் தேர்வு கூட ஊழியர்கள் அத்துமீறி நடந்து கொண்டதாக புகார்கள் எழுந்தது.

மாணவியொருவர் செய்துள்ள முறைப்பாட்டில், என்னை அங்கிருந்தவர்கள் உள்ளாடை மற்றும் மேலாடையை கழற்ற கூறி சோதனை செய்தனர். என்னை போல பல மாணவிகளின் உள்ளாடைகளையும் கழற்றி சோதனை செய்தனர். கழற்றப்பட்ட உள்ளாடைகளை அங்குள்ள ஒரு அறையில் வைத்திருந்தனர் எனத் தெரிவித்துள்ளார்.





# உதவும் கரங்கள்

லயன்ஸ் கழகம் 306 B2 யின் ஆளுநர் கிரேஷன் பெர்ணான்டோவை வரவேற்கும் முகமாக கொட்டாஞ்சேனை சென் லூசியஸ் தேவாலயத்தில் லயன்ஸ் கழகம் Colombo Ocean city 306B2யின் தலைவர் P.இராஜேந்திரன் மற்றும் உறுப்பினர்கள் G.இந்திரன் , N.தவக்குமார் ஆகியோரின் அனுசரணையில் 2022.07.13 நிகழ்வொன்று நடைபெற்றது.

அதன்போது, வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் தேர்ந்தெடுக்கப்பட்ட 85 மேற்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களும்,வீட்டு விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக பயிர் விதைகளும் வழங்கப்பட்டன.



## கொடியேற்றம்...

அக்கரைப்பற்று ஸாவியத்துல் ஹல்லாஜிய்யா பள்ளிவாசலில் அண்மையில் இடம்பெற்ற கொடியேற்ற நிகழ்வொன்றை படங்களில் காணலாம்.

(படங்கள் – நூருல் ஹுதா உமர்)



## பற் சிகிச்சை ஆரம்பம்...

வவுனியா பல்கலைக்கழகத்தில் பற் சிகிச்சை சுகாதார பிரிவு, நேற்று முன்தினம் (18) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அவுஸ்ரேலிய மருத்துவ உதவி நிறுவனத்தின் நிதி உதவியுடன், 3.5 மில்லின் ரூபாய் செலவில், நிறுவனத்தின் தலைவர் வைத்தியர் மனமோகன் மற்றும் வைத்தியர் திருமதி கௌரி மனமோகனால், இந்தப் பற் சிகிச்சை சுகாதார பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

(படங்கள் – க.அகரன்)



## சிலை திறப்பு விழா...

சுவாமி விபுலானந்தரின் மகாசமாதி தின நிகழ்வும், அடிகளாரின் சிலை திறப்பு விழாவும், விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில், சுவாமியின் பிறந்த ஊரான காரைதீவில் நேற்று (19) சிறப்பாக நடைபெற்றன.

(படங்கள் – சகா)



## சிரார்த்த தினம்...

1948 ஆம் ஆண்டு இறையடி எய்திய சுவாமி விபுலாநந்தரின் 75 ஆவது சிரார்த்த தினத்தையொட்டி, மாத்தளை இந்து தேசிய கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச்சிலைக்கு மாத்தளை சுவாமி விபுலாநந்த கலா மன்றத்தினர் (19.07.2022) மலர் மாலை அணிவித்து, விளக்கேற்றி மரியாதை செலுத்தினர்.

( ஆ.சுதாகரன்)

# இலவச மருத்துவ முகாம்




முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கான தொற்றா நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை (18) காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது தொற்றா நோய்களான இரத்த சீனி மட்டம், இரத்தில் கொலஸ்ரால் மட்டம், உடற்திணிவு சுட்டி, வயிற்றுப்பருமன், இரத்த அழுத்தம்(பிறசர்) ஆகிய மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

(சுப்ரமணியம் பாஸ்கரன்)



## விபுலானந்தரின் நினைவுதினம்...

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் 75வது நினைவுதினம், திருகோணமலை - சம்பூர் கலா மன்றத்தின் அனுசரணையில், சம்பூர் மகா வித்தியாலய மாணவ -மாணவிகளின் பங்குபற்றலோடு, சம்பூரில் நேற்று (19) காலை நடைபெற்றது.

(படங்கள் – தீஷான் அஹமட்)

## மகோற்சவம்

கிளிநொச்சி, கரைச்சி புளியம்பக்கரையின் நாகதம்பிரான் கோவிலின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா, நேற்று முன்தினம் (18) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து வரும் 10 நாட்கள் பூசை, வழிபாடுகள் இடம்பெறுவதுடன், எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் 28ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(படங்கள் – சுப்பிரமணியம் பாஸ்கரன்)



பாகிஸ்தான்

# படகு கவிழ்ந்ததில் 20 பேர் உயிரிழப்பு

படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்த சம்பவம் பாகிஸ்தானில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


பாகிஸ்தானில் சாதிக்பாத் மாவட்டத்தில், சிந்து நதியில் நேற்று முன்தினம் (18) சுமார் 100 பேரை ஏற்றிக் கொண்டு திருமண வைபவமொன்றுக்குச் சென்ற படகே இவ்வாறு பாரம் தாங்க முடியாமல் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக கூறப்படுகிறது.



இந்நிலையில் 20 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில், 30 பேருக்கும் மேற்பட்டவர்களைத் தேடி வருவதாக மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்றும் 35 பேர் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உக்ரேன்




## கூகுளுக்கு 13,023 கோடி ரூபாய் அபராதம்

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கு கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து போர் இடம்பெற்று வருகின்றது.

இந் நிலையில் உக்ரேனில் போர் நடவடிக்கை குறித்த வதந்திகளை நீக்கத் தவறியதாக கூகுள் நிறுவனத்திற்கு ரஷ்ய நீதிமன்றம் இலங்கை மதிப்பில் சுமார் 13,023 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யூடியூப் தளத்தில் ஒளிபரப்பான உக்ரேன் போர் குறித்த செய்திகள், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் வகையிலும், இளைஞர்களை நாட்டுக்கு எதிராக போராட்டம் நடத்த தூண்டும் வகையிலும் இருந்ததாகவும், அதை நீக்கக் கோரி பலமுறை எச்சரிக்கை விடுத்தும், நீக்கத் தவறியதாக கூகுள் நிறுவனத்திற்கு அபராதம் விதிக்கப்பட்டதாக ரஷ்ய தொலைத் தொடர்புத்துறை கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

### வணிக வளாகத்தில் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்:

## 4 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவில் வணிக வளாகம் ஒன்றில் மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் அமைந்துள்ள வணிக வளாகமொன்றில் கடந்த 17 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த ஒரு வணிக வளாகத்தில் அமைந்துள்ள உணவு விடுதிக்கு வந்த மர்ம நபர் ஒருவர் திடீரென்று அங்கிருப்பவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.




இதில் மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட மர்ம நபரும், பிரதேசவாசி ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 2 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## தார் உருகியதால் விமான சேவைகள் இரத்து



பிரித்தானியாவில் அண்மைக் காலமாக கடுமையான வெப்பநிலை நிலவி வருகின்றது. இதனால் அந்நாட்டு மக்களை வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என அந்நாட்டு அரசு அறிவுறுத்தி வருகின்றது.

இந்நிலையில் லண்டனில் விமான ஓடுபாதையின் தார் உருகும் அளவுக்கு உச்சபட்ச வெப்பம் நிலவியதால் லூடன் விமான நிலையத்தில் விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஓடுபாதையில் தரையிறங்க வேண்டிய விமானங்கள் பல்வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பின்னர் லூடன் விமான நிலையத்தில் விமானங்கள் புறப்படுவதற்கு மாத்திரம் அனுமதி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

ரஷ்யா



## உக்ரேனியர்களுக்கு ரஷ்யாவில் குடியுரிமை

உக்ரேனின் கிழக்குப் பகுதியான டான்பாஸை ரஷ்ய இராணுவ படைகள் முழுவதுமாக சுதந்திர பகுதிகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் உக்ரேனில் ரஷ்ய இராணுவ படைகள் கைப்பற்றியுள்ள பகுதிகளில் உள்ள மக்களை ரஷ்ய குடிமக்களாக மாற்றும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டு வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக உக்ரேனின் டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் ரஷ்யாவில் வசிப்பதற்கும், வேலை செய்வதற்கும்,

> **அவர்களுக்கு உதவ பல்வேறு நடவடிக்கைகளை ரஷ்யா முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது**

ஆவணங்களை பெறுவதற்கும் கைரேகை, புகைப்படம் மற்றும் கேள்விகளுக்கு உட்படுத்தப்படுவர் என ரஷ்யா தெரிவித்துள்ளது.


எனினும் விண்ணப்பதாரர்களிடம் அனைத்து அடையாள ஆவணங்களும் இல்லாத சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு உதவ பல்வேறு நடவடிக்கைகளை ரஷ்யா முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## 1 பவுண்ட் வீடு மாளிகையானது

1 பவுண்டுக்கு வாங்கிய பாழடைந்த வீட்டை Maxine Sharples என்ற 35 வயதான பெண்ணொருவர் மாளிகையாக்கிய சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதுகலை பட்டதாரியான அவர் பிரித்தானியாவில் காணப்படும் ஒரு பவுண்ட் திட்டத்தின் கீழ் பாழடைந்த நிலையில் உள்ள வீடொன்றை வாங்கியுள்ளார்.



Webster சாலையில் அமைந்துள்ள குறித்த வீட்டை வாங்கிய அவர் தனது சொந்த பணத்தையும் அரச வளங்களையும் பயன்படுத்தி நகர சபையுடனான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அதை மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்துள்ளார்.

### இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# வெற்றியை நோக்கி பாகிஸ்தான்

இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த முதலாவது டெஸ்டின் நேற்றைய நான்காம் நாளின் தேநீர் இடைவேளையின்போது வெற்றியை நோக்கி பாகிஸ்தான் பயணிக்கிறது.



தமது இரண்டாவது இனிங்ஸில் 342 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடும் பாகிஸ்தான், 2 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், அப்துல்லாஹ் ஷஃபிக் ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களையும், அணித்தலைவர் பாபர் அஸாம் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றவாறு காணப்படுகின்றனர். முன்னதாக, 35 ஓட்டங்களுடன் இமாம்-உல்-ஹக் ஆட்டமிழந்திருந்தார். பந்துவீச்சில், ரமேஷ் மென்டிஸ், பிரபாத் ஜெயசூரிய ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 222/10

(துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 76, மகேஷ் தீக்‌ஷன 38, ஒஷாட பெர்ணாண்டோ 35, குசல் மென்டிஸ் 21, தனஞ்சய டி சில்வா 14, கசுன் ராஜித ஆ.இ 12, ரமேஷ் மென்டிஸ் 11 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 4/58, ஹஸன் அலி 2/23, யசீர் ஷா 2/66, நசீம் ஷா 1/53, மொஹமட் நவாஸ் 1/18)

பாகிஸ்தான்: 218/10

(துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 119 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 5/82, ரமேஷ் மென்டிஸ் 2/18, மகேஷ் தீக்‌ஷன 2/68, கசுன் ராஜித 1/42)


இலங்கை: 337/10

(துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் ஆ.இ 94, குசல் மென்டிஸ் 76, ஒஷாட பெர்ணாண்டோ 64, ரமேஷ் மென்டிஸ் 22, தனஞ்சய டி சில்வா 20, திமுத் கருணாரத்ன 16, நிரோஷன் டிக்வெல்ல 12, மகேஷ் தீக்‌ஷன 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மொஹமட் நவாஸ் 5/88, யசீர் ஷா 3/122, ஹஸன் அலி 1/19, நசீம் ஷா 1/24)

பாகிஸ்தான்: 147/2

(துடுப்பாட்டம்: அப்துல்லா ஷஃபிக் ஆ.இ 77, இமாம்-உல்-ஹக் 35, பாபர் அஸாம் ஆ.இ 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: ரமேஷ் மென்டிஸ் 1/46, பிரபாத் ஜெயசூரிய 1/63)

## ஏ.சி மிலனில் ஒப்பந்தத்தை நீடித்த இப்ராஹிமோவிச்



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனின் முன்களவீரரான ஸல்டான் இப்ராஹிமோவிச், அக்கழகத்துடன் ஓராண்டு ஒப்பந்த நீடிப்பொன்றைக் கைச்சாத்திட்டுள்ளதாக அக்கழகம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இவ்வாண்டு மே மாதத்தில் முழங்கால் சத்திரசிகிச்சைக்கு உள்ளான 40 வயதான இப்ராஹிமோவிச், அடுத்தாண்டு வரையில் விளையாட மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அத்லெட்டிகோ செல்லும் றொனால்டோ?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான கிறிஸ்டியானோ றொனால்டோவைக் கைச்சாத்திடுவது குறித்து அவரது பிரதிநிதிகளை ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்றிட் தொடர்பு கொண்டதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், 37 வயதான றொனால்டோவின் யுனைட்டெட்டுடனான எஞ்சியுள்ள ஓராண்டு ஒப்பந்தத்தையும் தாண்டி யுனைட்டெட்டில் றொனால்டோ தொடரலாம் என யுனைட்டெட்டின் முகாமையாளர் எரிக் டென் ஹக் தெரிவித்துள்ளார்.



### றேடியன் விளையாட்டுக் கழகத் தொடர்:

## சம்பியனான ஒஸ்போட் விளையாட்டுக் கழகம்



றேடியன் விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் ஒஸ்போட் கழகம் சம்பியனானது.

குணசிங்கபுர விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரதம அதிதியாக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எம். நவாஸ்தீனும், கௌரவ அதிதிகளாக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எம்.என்.எம். இமாஸ், எம்.எஸ்.எம். இசாம், எம்.எஸ்.எம். சப்ரி, எம்.ஏ.எம். தில்சாட், எம்.கே.எம். ரிகாஸ் மாஸ்டர், றேடியன் கழக முன்னாள் செயலாளர் எம்.இசட். எம். சபார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 20 ஜூலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.